விலை ரூபா 5/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் 52 | புரட்டாதி - 2002 | பக்கங்கள் 12 | ஒளி 63

★ யாழ் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள்

## தற்போது மாறிவரும் புதியசூழ்நிலைகளுக்கேற்ப

## ஈடுகொடுக்கத் த யாராகிக் கொள்ள வேண்டும்!

**பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரப் பிள்ளைவேண்டுகோள்.**

காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் வழங்கப்படும். கூப்பனுக்கான உணவுப்பொருள் விநியோகம், நிவாரணம் போன்ற அத்தியாவசிய சேவைகளில் கணிசமான பங்காற்றி வரும் கூட்டுறவு நிறுவனங்கள் தற்போது மாறிவரும்புதிய சூழ்நிலைகளுக்கேற்ப தன்னை ஈடுகொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்;

இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம்; கூட்டுறவுத்திணைக்களம், யாழ்ப்பாணம், மாவட்ட கூட்டுறவு சபை ஆகியவற்றுடன் இணைந்து நடத்திய பொது முகாமையாளர் மற்றும் நடுத்தர முகாமைகளுக்கான பயிற்சிக்கருத்தரங்கில் உரையாற்றிய போதே பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்

இப்பயிற்சிக் கருத்தரங்கு, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவு சபைத்தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது.

"யாழ். கூட்டுறவின் இன்றைய நிலையும், இவ்வமைப்புக்கள் மக்களின் விருத்திக்கு ஆற்றக் கூடிய பங்களிப்பும்" என்னும் பொருள் பற்றி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றுகையில் மேலும் கூறியிருப்பதாவது ;

கூட்டுறவுத்துறையானது இந்நாட்டில் வாழ்கின்ற மக்களுக்கு கூடியளவு சேவைகளை வழங்கி வருவதினால் கூடுதலான அளவு குற்றங்களையும் அத்துறை கேட்க வேண்டியுள்ளது, இந்நிலையிலும் கூட்டுறவுத்துறை மக்களுக்கு அளப்பரிய சேவை செய்து வருவதினால் அத்துறையைச் சார்ந்த உங்களை மதிப்பவர்களில் நானும் ஒருவன்.

1940 களில் நமது நாட்டில் நெல் உற்பத்தி மிகவும் குறைந்த

( 12ம் பக்கம் பார்க்க)

● யாழ் குடாநாட்டில்

## கூட்டுறவு இயக்கத்தை மீளவும் கட்டி எழுப்ப கூட்டுறவாளர்கள் முன்வர வேண்டும்

1987 - ம் ஆண்டு பெரும் பின்னடைவு நிலையில் இருந்த கொட்டப்பொல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இன்று ஏனைய பகுதிகளில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. சுமார் 500 பணியாளர்களைக் கொண்ட இச்சங்கம் வருடம் ஒன்றுக்கு 60 கோடி ரூபா வருமானமாகப் பெறுவதுடன் சுமார் 37 லட்ச ரூபாவை மாதாந்த சம்பளமாக வழங்கி வருகிறது என்று கொட்டப்பொல பலநோக்குக் கூட்டுறவச்சங்கத் தலைவரும், தேசிய கூட்டுறவு சபையின் உபதலைவருமான திரு. பண்டுரானவாக தெரிவித்துள்ளார்.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அண்மையில் தென்பகுதிக் கூட்டுறவா

(12ம் பக்கம் பார்க்க)

### உள்ளே....


ஃ யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட
ஃ நோய்களும் அதன் அறிகுறிகளும்...
ஃ இஞ்சிச் செய்கையும்...
ஃ தென்னைவவளமும் அதன்...
ஃ ஊழியர் நடத்தையில்...
ஃ பணியாளர்களுடன் கலந்தாலோசித்து...

# ★ யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கங்களுக்கு நட்டஈடு வழங்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை!

கடந்த கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும், அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாகவும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பல மில்லியன் கணக்கான ரூபாக்களை நட்டமாக இழந்திருப்பதினால், நலிவடைந்த நிலையில் இருந்து அவற்றை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு சுமார் 168 மில்லியன் ரூபாவை இழப்பீட்டுத் தொகையாக வழங்குவதற்கு ஏற்ப ஒழுங்குகள் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த கூட்டுறவு அமைச்சர் ஏ. ஆர், எம். அப்துல்காதரிடம் வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வழங்கியிருந்த மகஜரில் இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறை அமைச்சர் ஏ. ஆர். எம். அப்துல்காதரிடம் சமாசம் வழங்கியிருந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு;

எமது அமைப்பின் மீதான மொத்த விற்பனவு, மற்றும் காலால் வரியை முற்றாக நீக்குதல் அல்லது வரிச்சலுகை அளித்தல்.

மதுபான விற்பனை, மற்றும் போத்தல், அடைத்தல் தொழிலுக்கான அனுமதிப்பத்திரம் பெற்றுத் தருதல்.

திக்கம் வடிசாலையை மீண்டும் கூட்டுறவு அமைப்பின் கீழ் ஒப்படைத்தல்; சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத்திற்கு மருத்துவ மற்றும் ஆலோசனைகள் உதவிகள் பெற்றுத்தர வேண்டும்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

### அ. பணியாளர்களுக்கான இழப்புக்கள்

கூட்டுறவு நிறுவனப் பணியாளர்கள் இப் போர்ச் சூழலில் இறந்துள்ளனர். ஊனமடைந்துள்ளனர். ஆனால் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 01 - 11 - 1999 இல் வெளியான சுற்று நிருபம் 45 / 99க்கு அமைவாக எவ்வகையான கொடுப்பனவுகளையும் வழங்க முடியாத நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையில் அப்பணியாளர்கள் குடும்பங்களின் துயர்போக்க அரச நிதி மூலம் ஓர் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்க வழி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### ஆ. பணியாளர்களுக்கான இடர் காலக் கொடுப்பனவு

பணியாளர்கள் இப் மாவட்டங்களில் மிகுந்த கஸ்டத்தின் மத்தியிலேயே கடமையாற்றியபோதும் நிறுவனங்கள் நட்டத்தை தழுவிக்கொண்டன இந்நிலையில் இடர்காலக் கொடுப்பனவினை பணியாளர்கள் தங்கள் சுற்று நிருபத்திற்கமைய பெற முடியாத நிலை ஏற்பட்டது. எனவே இங்கு கடமையாற்றிய பணியாளருக்கு இக் கொடுப்பனவை ஒத்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பெற்றுக்கொடுக்க தங்களின் மேலான உதவியை நாடி நிற்கின்றோம். மேலும் யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்து இம்மாவட்டத்தில் இருக்கும் பணியாளர்கள் மீளவும் அங்கு செல்லும் வேளை மீளப் பணிக்கமர்த்த தங்களின் ஆலோசனையை கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்.

### இ. துறைசார் பகுதிகளை நவீன மயப்படுத்துதல்

எமது சங்கங்களின் தலைமை அமைப்பான சமாசமானது இன்று குறிப்பாக அங்கத்தவர் நலனகருதி காப்புறுதித்திட்டம் போன்று நடைமுறைப்படுத்தும் விபத்து ஓய்வு நலத்திட்டமானது எமது அங்கத்துவ சங்கங்களினதும் சகல அங்கத்தவர்களினதும் தனித்தனியான கணக்குகளை கொண்ட ஓர் வங்கிப் பேரேட்டு முறையில் பேணப்பட்டு வருகின்றன இத்திட்டத்தைக் கணனி மயப்படுத்துவதன் மூலம் எமது உயிர்நாடிகளாக அமைந்த அங்கத்தவர்களுக்கு சிறப்பாகச் சேவையாற்ற முடியும், அத்துடன் சமாசம் ஓர் பாரம்பரிய இயந்திரங்களைக் கொண்ட அச்சகத்தைப் பயன்படுத்தியே சகல சங்கங்கள் கொத்தணிகளுக்கும் காகிதாதி விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றது. எனவே சமாச அச்சகத்தை நவீன கணனி முறையிலான அச்சகமாக மாற்றியமைப்பதின் மூலம் சிறந்த சேவையாற்ற முடியும். மேலும் எமது சங்கங்கள் இன்று தமது நிதிக் கட்டமைப்பை ஒழுங்குபடுத்தும் முகமாக ஓர் கிளை நிறுவனமாக கூட்டுறவு கிராமிய வங்கிகளை நடாத்தி வருகின்றன, இவ் வங்கிகளை நாம் கணனி மயப்படுத்துவதின் மூலம் எமது நிதி உறுதிப்பாட்டை மேலும் ஸ்திரமானதாக்க முடியும், இதனால் எமது இவ்வாறான முக்கிய பல்வேறு பகுதிகளை கணனிமயப்படுத்தும் நோக்கத்திற்கு தங்களால் இயன்ற நிதி உபகரண மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும்

### பனை தென்னை வள அழிப்பும் மீள் நடுகையும்

இலங்கையில் காணப்படும் பனை வளத்தின் 99% மானவை வட கிழக்கில் காணப்படுகின்றது அதிலும் பெரும் பகுதி வடமாகாணத்திலுள்ளது. இன்று திட்டமிட்ட அடிப்படையில் இராணுவ நடவடிக்கை, யுத்த சூழ்நிலை போன்ற காரணங்களால் ஏறத்தாழ 25 இலட்சம் பனைகள் தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளன. இவ் இழப்பானது இவற்றை நேரடியாக நம்பியுள்ள 15000 குடும்பங்களுக்கும் இவர்களின் பொருளாதார சமூக மேம்பாட்டுக்கும் விழுந்தபேரிடியாகவுள்ளது எனவே இவ்வாறு அழிக்கப்பட்ட பனை தென்னைகளுக்கு பதிலாக மீள் நடுகை செய்வதற்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் நிதிசார் உதவிகளையும் இத்தால் கோரி நிற்கின்றோம், இது தொடர்பில் தங்களுக்கு பிரதியிடப்பட்டு கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

### பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலையிலுள்ளோம்

எமது கூட்டுறவு அமைப்பின் கீழுள்ள சங்கங்கள் கொத்தணிகள் மூன்று வேறுபட்ட துறைகளிலும் தமது உற்பத்திகளை விரிவுபடுத்தி பொருளாதார சமூக, அபிவிருத்திக்கு பங்களித்து வருகின்றன. குறிப்பாக,

1. மதுபானவகை உற்பத்திகள் பதநீர், பாணி, கல்லாக்காரம்
2. பனை வெல்லம், பனம் சீனி ஒடியல் புழுக்கொடியல் பற்பசை நோய்எதிர்ப்பு தடைபொருட்கள்

( 12ம் பக்கம் பார்க்க )

# சுகவளம்

# நோய்களும் அதன் அறிகுறிகளும்

## ( Diseases and Symploms )

டாக்டர் கே. ரகுராம்
அக்குபங்சர் வைத்தியர் உரும்பிராய்·

ஒரு பூரண ஆரோக்கியமான நிலையில் இருக்கும் ஓர் மனிதன் உடல், உள ( மன ), சமூக, ஆத்மீக நன்நிலையில் இருக்கிறான்.

ஒரு நோயானது மனிதனில் பரிணமிப்பதற்கு பல காரணிகள் ஏதுவாகின்றன. அதில் மிகவும் முக்கியமான காரணியாக தவறான உணவுப் பழக்கம் அமைந்துவிடுகிறது. பரந்துபட்ட மக்களிடையே காணப்படும் அறியாமை காரணமாக நோய் அறிகுறிகளைநோயாகக்கருதி அணுகுதன்மைகாணப்படுகிறது உண்மையில் நோய்எதிர்ப்புசக்தி(Immuhne Power) நோயை எதிர்த்துப்போராடும் போது வெளிப்படுத்தப்படும் வெளிப்பாடுதான் நோய் அறிகுறிகள் ஆகும். உதாரணமாக ஒருவருக்கும் காய்ச்சல் ( ஜாரம் ) ஏற்படுகிறதென்றால், அது குறித்து யாதெனில் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி பலமாக இருக்கிறது. அந்த நோய் எதிர்ப்புசக்க்தி, உடலில் எந்த ஒரு மூலையிலும் நோயின்தன்மை இருந்தால் அதை முறியடித்து வெற்றிகொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறது. என்பதைத் தான் அது குறிக்கிறது உண்மையில் ஒரு சிகிச்சை முறை எவ்வாறு இருக்க வேண்டுமென்றால் காய்ச்சல் என்ற நோய் அறிகுறியை ஏற்படுத்திய அந்த நோய்த்தன்மையை முழுமையாக முறியடித்து வெற்றி கொள்ளக்கூடிய வகையில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதாக இருக்க வேண்டும்,

காய்ச்சல் ஏற்பட்டவுடன் பெரும் பரபரப்பும், கவலையும் அடைந்து விடுகின்றோம், காய்ச்சலைத் தணிப்பதற்காக மாத்திரைகளை உட்கொள்கிறோம். காய்ச்சல் மாத்திரைகளினால் ( Anti Fever Medicines ) ஏற்படும் விளைவுகள் என்ன என்பதனைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். காய்ச்சல் என்பது நோய் எதிர்ப்பு சக்தியின் உச்சக்கட்ட இயக்கமாகும் உடலானது தீவிரமாக நோயை எதிர்ந்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நோய் எதிர்ப்பு சக்தியின் திறனுக்கேற்ப நோய் அழிக்கப்பட்டு வருகிறது முக்கியமான இந்த நிலையில். நாம் மாத்திரைகள் மூலம் உடல் வெப்பத்தைத் தணிக்கிறோம், அதாவது நோய் எதிர்ப்பு சக்தியைக் கட்டுப்படுத்தி அதன் இயக்கத்தை ( Function ) அது நோயை எதித்து நிற்கும் செயற்பாட்டை வலுவிழக்கச் செய்கிறோம். அதாவது நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைக்கிறோம். காய்ச்சல் என்பது ஒரு நோயின் ஆரம்ப அறிகுறிதான். இதற்குக் காரணமான அடிப்படை நோய்த் தன்மை உடல் முழுவதையும் ஒரு நோய் பாதிக்கிறது. இதன் விளைவு பல அறிகுறிகளை ( Symptoms ) ( உதாரணமாக ) தொண்டைவலி, தொண்டைக்கரகரப்பு ) உடலிலே தொற்றுவிக்கிறது. நோயின் காரணத்தை ( Liseas Force ) நோயின் அடிப்படைத்தன்மையை, Pathogenic - Forc உணரத்தான் முடியுமே தவிர பார்க்க முடியாது. பரிசோதனைக் கருவிகள் ( Scientific diagnosis ) மூலம் நாம் பார்ப்பது,கண்டுபிடிப்பது அனைத்தும் நோயின் விளைவுகளைத் தானே தவிர நிச்சயமாக நோயை அில

*What Scientific Diagnosis is Only Pathology l.c The Result of a Pathogenic Force. The Pathogenic Force or the diseas Force is an energy force and Thus is invisible. This Force attacks any week Tissue or Organ in our body and causes Tissue or Organ distruction This is thePathogenisis And the end resultof It is thePathology l.e A Visible organ damage.*

எந்த ஒரு நோயின் போதும் நமக்கு காய்ச்சல் ஏற்படவில்லையென்றால் நிச்சயமாக நமக்கு ஒன்று புரிந்த க வேண்டும். அது எதுவெனில் நாம் மிக முக்கியமான எதிர்ப்பு சக்தியை இழந்து விட்டோம் என்பதையும் வாழ்நாள் முழுவதும் குறிப்பிட்ட நோயின்தன்மை எம்மை விட்டுப் பிரியப்போவதில்லை என்பதையும் இவ்வாறே வெப்ப எதிர்ப்பு சக்தியை இழக்கிறோமோ, அல்லது ஒவ்வொரு முறையும் காய்ச்சல் ஏற்படும் போது நோயைக் குணமாக்காமல் காய்ச்சலை மட்டும் ஒடுக்குகிறோமோ அப்போதே திட்டவட்டமாக ஒவ்வொரு நோயும் நமது உடலில் நிரந்தரமாகத் தங்க வழிவகுத்துக் கொடுக்கின்றோம் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

*(Every diseases bccomes Chronic when we lose our Fever Energy Producing Capacity and Each Time we take anti Fever medicines the diseases cnter deep and deeper )*

இரத்தஅமுக்கம் *B.P* அதிகரிப்பது, இரத்தத்தில் குளுக்கோஸின் அளவு அதிகரிப்பது தலைவலி, இடுப்புவலி, முழங்கால்வலி கண்ணில் தோன்றும் அறிகுறிகள் காதில்தோன்றும் அறிகுறிகள்எல்லாமே, உடலைப்பாதுகாக்கும் நோக்கத்துடன் நோய் எதிர்ப்பு சக்தியின் செயற்பாடு மூலம் உடலினால்ஏற்படுத்தப்படுகின்ற பாதுகாப்பு ஏற்பாடே(Self Protective Mechanism) ஆகும். கண்ணில் ஒரு நோய் அறிகுறி வெளிப்படின் அதற்குக் காரணமான நோய்த்தன்மை அமைந்துள்ள இடம் கல்லீரல் ( கல்லீரலின் தோற்றமும் கண்ணின் தோற்றமும் ஒன்றாக இருப்பதை தெளிவாக அவதானிக்கலாம்: அதேபோல காதின் நோய் அறிகுறிகள் வெளிப்படின் அதற்குக்காரணமான நோயின்தன்மை அமைந்துள்ள இடம் சிறுநீரகம் ( சிறுநீரகமும், காதின் வெளிப்புறப்பகுதியும் தோற்றத்தில் ஒன்றாக இருப்பதை அவதானிக்கலாம். வாய்ப்பகுதியில் ஏதாவது நோய் அறிகுறிகள் தோன்றினால் அதற்குக் காரணமான நோயின் தன்மை அமைந்துள்ள இடம் இரப்பை அதேபோல கர்ப்பப்பையில் தோன்றுகின்ற. வெளிப்படுத்தப்படுகின்ற அறிகுறிகள் சிறுநீரகத்தின் பலவீனமான சோர்வான இயக்கத்தைக்குறிக்கிறது. அதாவது சிறுநீரகத்திலுள்ள நோயித்தன்மையின் வெளிப்பாடு கர்ப்பப்பையில் நோய் அறிகுறிகளாகவும் ( தொடர்ச்சியான இரத்தப்போக்கு, மாதவிலக்குக் கோளாறுகள்,

(9ம் பக்கம் பார்க்க)

# இஞ்சிச்செய்கையும் நோய்களைக் கட்டுப்படுத்தலும்

சிறுபோகத்தில் நடப்பட்ட இஞ்சியில் தற்போது சிறு அங்குரங்கள் வளரத் தொடங்கியிருக்கும். இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பல பராமரிப்புகள் உள்ளன என்பதை மறந்துவிடாதீர்கள். ஜூன் ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் வரட்சியான பிரதேசங்களில் இஞ்சி விரைவாக வளரும். எனவே மழையில்லாவிடில் நீர் ஊற்றினால் நல்ல விளைச்சலைப் பெறலாம்.

பயிர் 3 மாத 5 மாத வயதை அடையும் இரு சந்தர்ப்பங்களிலும் மேற்கட்டுப்பசளைகளை இடல்வேண்டும் என்பதை மறந்து விடாதீர்கள். இதற்கு 50 கி.கி. யூறியா, 50 கி.கி. மியூறியேற்றுப் பொட்டாசு என்பனவற்றை ஒன்றாகக் கலந்து ஹெக்டயரொன்றிற்கு இடவும் (ஒரு ஏக்கருக்கு 20 கி.கி. வீதம் இடவும்) மண்ணில் ஈரம் இருக்கும் போதே பசளைகளை இடல் வேண்டும். எவ்வாறாயினும் ஒக்டோபர் மாதத்திற்குமுன் பசளைகள் யாவற்றையும் இட்டுபூர்த்தி செய்ய வேண்டும்.

## மண்வளம்

இச் சந்தர்ப்பத்தில் பின்வரும் நோய்கள் அல்லது பீடைகளில்இருந்து உங்கள் பயிர்களைப் பாதுகாக்கலாம். எனவே அவதானமாகஇருந்துஇதனைக் கட்டுப்படுத்த வேண்டும்.

### நோய்கள்

**மென் அழுகல் :**

இது ஒரு பூஞ்சண நோயாகும். நோய் தொற்றல் ஏற்படும் போது நிலத்தில் வெளியேயுள்ள அங்குரத்தின் அடிப்பகுதி மென்மையாகும் இதன் பின் ஈரத்தன்மையானதாக மாறிஅழுகும். தாவரம் வாடும், இலை நுனி மஞ்சள் நிறமாகும். இறுதியில் முழு இலையும் மஞ்சள் நிறமாகி உலர்ந்து இறக்கும். இதனால் அங்குரத்தின் வளர்ச்சி தடைப்பட்டு, கிழங்கு உருவாகாது இந் நோய் பின்னர் இஞ்சிக்கும் பரவும் இதன் உட்புற இழையங்கள் மென்மையாகி கறுப்பு நிறமடையும். அறுவடை செய்யப்பட்ட இஞ்சியும் அதிகளவில் பாதிக்கப்படும்.

**கட்டுப்படுத்தல் :**

தோட்டத்தில் நீர் தேங்கி நிற்காது, கவனமாகப் பராமரிக்க வேண்டும். தோட்டத்தில் நோய் பரவும் போது தாவரத்தைச் சுற்றி உள்ள மண்ணிற்கு திராம் என்னும் பங்கசு நாசினியை விசிறவும். இந் நோய் வராமல் தடுக்க தொடர்ச்சியாக ஒரே இடத்தில் இஞ்சியை செய்கை பண்ண வேண்டாம். நடமுன் திராம் என்னும் நாசினியில் இஞ்சியைப் பரிகரிக்கவும்.

**பக்றீரியா வாடல் ;**

இஞ்சி பயிரிடப்படும் ஏனைய நாடுகளிலும் பரவலாகக்காணப்படும் ஒரு நோயாகும். இது ஒரு பக்றீரியாவினால் ஏற்படுகின்றது. முதலில் கீழுள்ள இலை மஞ்சள் நிறமாகி வாடுவதோடு பின்னர் இவ்வாடல் படிப்படியாக மேல் நோக்கிப் பரவும் இதன் பின் நன்கு ஈரமானது போலக் காணப்படும். இச் சந்தர்ப்பத்தில் இஞ்சியிலிருந்து தண்டை இலகுவாக வேறாக்கலாம். கடத்தும் இழையங்கள் கடும் கபில நிறமாக அல்லது கறுப்பு நிறமாகக் காணப்படும். பாதிக்கப்பட்ட தண்டை அல்லது இஞ்சியை வெட்டி சுத்தமான நீரில் இடும்போது பால் போன்ற வெண்நிறமான திரவம் வெளியேறுவதைக் காணலாம்.

**கட்டுப்படுத்தல் :**

இந் நோய் ஏற்பட்ட பின்னர் இதனைக் கட்டுப்படுத்த முடியாது நோய் ஏற்படாது தவிர்த்துக் கொள்வதே மிக உகந்ததாகும். தோட்டத்தில் களை இல்லாது சுத்தமாக வைத்திருக்கவும், நீர் தேங்கி நிற்காது வடிய விடவும். நோய் ஏற்பட்ட தாவரங்கள் அனைத்தையும் பிடுங்கி தோட்டத்திலிருந்து அகற்றி விடவும் எப்போதும் ஆரோக்கியமான நடுகைப் பொருட்களையே நடவும்.

**இலைப் புள்ளி நோய் :**

இது இலையைப் பாதிக்கும் ஒரு பூஞ்சண நோயாகும். இலையில் முதலில் இளமஞ்சல் நிறமான வட்டங்கள் உருவாகி பின்னர் இலை நீள்வட்ட வடிவாக ஏனைய இடங்களுக்கும் பரவும் இறுதியில் இப் புள்ளியின் மத்தியில் உள்ள பகுதி இறக்கத் தொடங்கி துளை விழும். இதனால் தாவரத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு, விளைச்சல் குறையும் மண் ஈரப்பதன் குறைவாகக் காணப்படும் போது தாக்கம் மேலும் மோசமாகப் பரவும் எனவே உலர் காலநிலை நிலவும் போது தாவரத்திற்குத் தேவையான நீரை ஊற்ற வேண்டும். இதனால் இலைகள் தொடர்ந்தும் வாடுவதை அல்லது தாக்கத்தை மேலும் குறைக்கலாம்.

**கட்டுப்படுத்தல் :**

போடோ கலவை போன்ற செப்பு அடங்கிய பங்கசுநாசினிகளை விசிறவும். நோயால் பாதிக்கப்பட்ட பாகத்தை அகற்றி எரித்து விடவும்,

**தண்டு துளைப் புழுவின் தாக்கம்;**

போலித் தண்டைசேதப்படுத்தும் ஒரு பீடையாகும். இவ் வண்டினால் இடப்படும் முட்டையிலிருந்து வெளியேறும் குடம்பிகள் தண்டைத் துளைத்து உட்சென்று அதன் பாகங்களை உண்ணத் தொடங்கும். இதனால் போலித்தண்டில் துளையிடப்பட்ட பகுதிக்கு மேல் உள்ள பகுதி இறக்கும்.

**கட்டுப்படுத்தல் :**

இத் தாக்கத்தை அவதானித்தவுடன் தாக்கம் ஏற்பட்டுள்ளபகுதியை இரண்டாகப் பிளந்து குடம்பிகளை அழித்து விடுவதன் மூலம் தாக்கம் மேலும் பரவுவதைத் தடுக்கலாம். பயிர் முதிர்ச்சியடைந்த பின் இப் பீடையின் தாக்கம் ஏற்படுமாயின் விளைச்சல் அதிகளவில் குறையாது என அவதானிக்கப்பட்டுள்ளது.

- நன்றி தினகரன்

# தென்னை வளமும் புனர்நடுகையின் அவசியமும்

தென்னை இலங்கையின் தேசிய வருமானத்தை ஈட்டும் பயிராக பாதுகாத்துப் பயன்பெற்று வரும் ஓர் பணப்பயிராகக் கணிக்கப்பட்டு வருகின்றது. இப் பயிரும் 'பாம்' குடும்பப்பயிராக இருந்து பனையின் பயன்போல அடியில் இருந்து நுனி வரையும் மனித வாழ்வுக்கு பயன்படுத்த உதவும் பொருட்களை ஈயும் விருட்சமாக எமக்குக் காட்சி தரும் ஓர் பணப்பயிராகும்.

உலக நாடுகளில் பரவுண்டுள்ள தென்னம் பயிரானது நடுகை செய்து 5-6 வருடங்களில் பயன்தரும் சிறப்புடையதென்றும் ஆசியாக் கண்டத்திலேயே அதிக அளவில் வளர்க்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. உலகில் 155 25 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் 103 கோடி தென்னைகள் காணப்படுவதாக புள்ளி விபரங்கள் தெரியப்படுத்துகின்றன. விபரம் கீழ் வருமாறு:

| நாடு | நிலப்பரப்பு ( இலட்சம் ஏக்கர் ) | தென்னை ( கோடி ) |
|---|---|---|
| 1. ஆசியா | 131·00 | 85.7 |
| 2 தென் பசுபிக் தீவுகள் | 11.00 | 7.0 |
| 3. வடமத்திய அமரிக்கா | 6.00 | 4.0 |
| 4. ஆபிரிக்கா | 7.00 | 4.6 |
| 5. தென்அமெரிக்கா | 0 85 | 1.6 |
| | 155.25 | 102.9 |

உலகில் ஆசியாக் கண்டத்தில் கூடுதலாகக் காணப்படும் இவ்வளம் இலங்கையில் 451486 கெக்ரெயர் நிலப்பரப்பில் ( 1128715 ஏக்கர் ) கிட்டத்தட்ட 677 32 இலட்சம் தென்னைகள் காணப்படுவதாகவும் இதன் ஏற்றுமதிப் பொருட்கள் மூலம் இலங்கை அரசு மொத்த தேசிய வருமானத்தில் கணிசமான தொகையைப் பெற்று வருவதையும் அறிய முடிகின்றது.

தமிழர்களின் தாயகமாக கருதும் வடக்கு கிழக்கு மாகாண பாரம்பரிய தமிழ் பேசும் மக்கள் குடிவாழ் நிலப்பரப்பில் 16692 கெக்ரெயர் நிலப்பரப்பில் ( 41730 ஏக்கர் ) 27.12 இலட்சம் தென்னை மரங்கள் இருந்ததாக விவசாய மதிப்பீடு - 1982 தெரிவிக்கின்றது. இவ்வளமானது வட.கிழக்கு மாகாணத்திற்கு ஓர் பணப்பயிராகவும், ஒவ்வோர் தமிழர் வீட்டிலும் உணவு உட்பட பயன்பாட்டுப்பொருள் வழங்கும் வளமாகவும் கருதப்பட்டு தென்னம் பண்ணைகளுக்கும் மேலாக ஒவ்வோர் குடியிருப்பு நிலங்களிலும் பயிரிட்டு வளர்த்து வரும் வழக்கமாகி விட்டதொன்றாகும், ஆடி மாதத்தில் சிறந்த விதை தேங்காய்களை தேர்ந்தெடுத்து பாத்தி அமைத்து முளை

கி. சிவநேசன்
பொது முகாமையாளர்
வட மா. ப, தெ.வ.அ. கூ. நிறுவனம்

விடச் செய்து தென்னம்பிள்ளைகளாக 2' அகலம் 2' ஆழம் 2' நீளம் கொண்ட குழிகளை தோற்று நீக்கி பசளையிட்டு ஒரு ஏக்கருக்கு 60 - 65 பிள்ளைகள் எனும்விகிதத்தில் சராசரி 20-25 இடைவெளி கொண்டு நடுகை செய்வது வழக்கத்தில் நடைபெறுவதாகும். முறையான நீர்பாசனம் மூலம் வளர்க்கப்படுவதால் 6 வருடங்களில் பயன்தரும் விருட்சங்களாக நாம் அதன் பயனை அனுபவிக்கத் தொடங்கலாம்.

இவ் வளத்தின் மூலம் தேங்காய், கொப்பறா, எண்ணெய், பிண்ணாக்கு. சிரட்டைக்கரி, மரப்பொருட்கள், ஈர்க்கு உற்பத்திகள், ஓலை, எரிபொருளாக மட்டை, தும்பு உற்பத்திகள் பலவும், சாற்று உற்பத்திகளான கள், சாராயம், தென்னம் பதநீர், வெல்லம் என்பவற்றை வருடம் முழுவதுமே வருமானம் பொருட்களாக பெறக்கூடியதான ஒரு விருட்சமாக எமது மண்ணில் காணப்படுகின்றது.

மேற்குறித்த வருமானப்பொருட்களில் ஒரு சிலவற்றின் வருமானக் கணிப்பீட்டினை அவதானிப்போம் ஒரு தென்னை நடுகை செய்து 5 வருடத்தின் பின் வருடாந்தம் குறைந்தது 80 தேங்காய்களைத் தரும் எனவே ஒரு ஏக்கரில் 80X60=4800 தேங்காய்கள் கிடைக்கும்.

ஒரு தேங்காய் ரூ 10/- எனில் 4800 க்கும் ரூபா 48000/- எனவே மாத வருமானம் - 4000/-

ஒரு தென்னை ஒரு வருடம் 12 ஓலை தருமெனில் ஒரு ஏக்கரில் 12X60 தென்னை 720 ஓலை கிடைக்கும்.

ஒரு ஓலை ரூ 8./- எனில் 8X720 - ரூபா, 5760/- எனவே மாத வருமானம் 480/-

எனவே ஒரு ஏக்கர் தென்னை மூலம் மாத வருமானமாக இரு பொருட்களில் மட்டும் ரூபா, 4480/- பெற முடிகின்றது. எனில் ஏனைய பொருட்களை ( பொச்சு, மட்டை, சிரட்டை ) திட்டமிட்டு பயன்படுத்தின் ஒரு ஏக்கர் மூலமாக வருமானமாக ரூ. 5000/- பெற முடியும். அத்துடன் பலருக்குத் சுயதொழில் முயற்சிக்கான வாய்ப்பையும் வழங்க முடியும்.

எமது வடகிழக்கு மாகாண நிலப்பரப்பில் உள்ள தென்னை வளத்தை திட்டமிட்டு பயன்படுத்தப்படுமாயின் எமது சுயதேவைகளுக்கான தன்னிறைவை அடைவதுடன், அன்னிய செலாவணியை மீதப்படுத்தி ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்து பொருளாதார மேம்பாட்டுக்கு வழி செய்யக்கூடிய வாய்ப்பு இவ்வளத்தின் மூலம் நிறைய உருவாக்க முடியும்.

பனையும் தென்னையும் வடகிழக்கின் தமிழர் பாரம்பரிய பூமியின் தேசிய விருட்சங்களாகவும், தேசிய பொருளாதார விருத்தியினை ஈட்டக் கூடிய வளங்களாகவும் காணப்படுவது எமக்குக் கிடைத்த பெரும் அதிர்ஷ்டமாகக் கொள்ளலாம்.

இந்நிலையில்தான் கடந்த பல வருடங்களாக வடக்கு கிழக்கு மாகாண நிலப்பரப்பில் நடைபெற்று

(8ம் பக்கம் பார்க்க)

# ஊழியர் நடத்தையில் ஆளுமையின் பங்கு

# Role of Personality in Employees Behaviour

### ஆளுமை என்றால் என்ன ?

ஆளுமை என்பது தனிநபர் மீது ஆதிக்கம் செலுத்தும் பண்பே ஆகும். அதாவது ஒரு நபரின் குணாதிசயங்கள் அல்லது பண்புகளும் அப்பண்புகளை தனது சூழலுக்கு ஏற்றவாறு அவர் மாற்றி நடந்து கொள்ளும் விதமே ஆளுமை எனலாம்.

உ-ம் பிரதான பண்பான வெட்கம், சோம்பேறிதன்மை, துணிந்தவர், கோபக்காரர், போன்ற பண்புகள் ஆளுமைப் பண்பாகும்.

### ஆளுமையின் பொதுவான இயல்புகள்; Common features of Personality :


ஆளுமைக்கென பொதுவாக சில பண்புகள் உள்ளன அவற்றை கீழ் வருமாறு நிரல்படுத்தலாம்.

1. ஆளுமை என்பது ஒரு நபரின் உளவியல் ரீதியான பண்புகளை விபரிக்கின்றது
2. ஆளுமை ஒரு நபரின் நடத்தையைத் தீர்மானிக்கின்றது.
3. இருநபர்களிடையே ஆளுமைப் பண்புகளை ஒத்திருப்பதில்லை
4. ஆளுமை நிலையான ஒன்றல்ல, அது நெகிழக் கூடியது.

ஆளுமைப் பண்புகளை அடிப்படையில் மாற்றம் செய்யலாம் எனக் கூறப்படுகிறது. அதாவது சோம்பலாக உள்ள ஒருநபரை சுறுசுறுப்பானவராக மாற்ற முடியும் அதாவது சூழலின் தன்மைக்கேற்ப ஒருவரின் ஆளுமைப்பண்பு மாற்றமடையும்.

### ஆளுமைப் பண்பை தீர்மானிக்கும் காரணிகள் ; (Determination of Personality)

ஒரு நபரின் ஆளுமைப் பண்பினை தீர்மானிக்கும் காரணிகளை பின்வருமாறு காட்டலாம் :




1. உயிரியல் காரணிகள் :

ஒரு நபரின் பரம்பரை, மூளையமைப்பு, பௌதிகத் தோற்றம் போன்றன உயிரியல் காரணிகளாகும். இது ஆளுமையை தீர்மானிக்கின்றது என ஆய்வுகள் கூறுகின்றன எனினும் போதிய சான்றுகள் முன்வைக்கப்படவில்லை.

2. குடும்பமும் சமூகமும் ;

ஒரு மனிதனின் ஆளுமையை குழந்தைப் பருவத்திலிருந்தே சமூகமான காரணிகள் தீர்மானிக்கின்றன. அதாவது பாடசாலை செல்ல ஆரம்பிப்பதற்கு முன்பு ஒரு குழந்தையின் நடத்தையை தாய், தந்தை, சகோதரர்கள், போன்றவர்களை அடிப்படையாக கொண்டமையும் பாடசாலைப்பருவத்தில் பாடசாலையில் நண்பர்கள், ஆசிரியர்கள் போன்றோரினை அடிப்படையாக கொண்டு குழந்தையின் ஆளுமைப்பண்புகள் மாற்றமடைகின்றது. பின்பு வயதடைந்து நிறுவனத்தில் பணிபுரியும் தனது சகபணியாளர்கள், மேலமைந்தார்கள், ( Superior ) கீழமைந்தார்கள் ( Subordinaters ) போன்றோருடன் இணங்கி செல்லும் போது ஆளுமைப்பண்புகள் வித்தியாசமடைகின்றது.

3. கலாச்சாரக் காரணிகள் ;

ஆளுமைப்பண்புகளும் கலாச்சாரத்துக்கும் இடையில் சீரான, நேரான தொடர்பு உண்டு என உறுதியாகக் கூற முடியாது. எனினும் கலாச்சாரமானது ஒருநபரின் சுயாதீன சுதந்திர உணர்வு, ஒத்துழைப்பு போன்ற பண்புகளை வளர்க்கிறது. இத்தகைய கலாச்சார நன்மைகளுக்கு இணங்கி செல்லும் போது ஆளுமை பண்புகள் விருத்தியடைகின்றது.

4. சூழல் காரணிகள் :

ஒருநபர் வாழ்கின்ற சூழலும் அவரின் ஆளுமைப் பண்பைத் தீர்மானிக்கும். உதாரணமாக படித்த ஊழியர்கள் பண்புமிக்க ஊழியர்களுடன் பழகும் ஒரு சாதாரண ஊழியர்களுடன் பழகும் ஒரு சாதாரண ஊழியரின் நடத்தையிலும் அவர்களது பண்பியல் அம்சங்கள் வேரூன்றி வருவதைக் காணலாம்.

### நிறுவன நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் பிரதான ஆளுமைப் பண்புகள்; (Major Personality Attributes Influencing in Organigational Behaviour);

1) கட்டுபாட்டு நிலை / மன நிலை (*Locus of Control*)

மக்கள் ஒவ்வொருவரும் பொதுவாக இரண்டு வகையான மன நிலையை கொண்டிருப்பார்கள். அவையாவன,

சண்முகலிங்கம் - சதீஸ்
முகாமைத்துவ மாணவன்
( 2 ம் வருடம் )
( யாழ். பல்கலைக்கழகம் )

1. உள்ளக நிலை (*Internals*)
2. வெளியக நிலை (*Externals*)

உள்ளக நிலையை கொண்ட மக்கள் எப்பொழும் விதியை மதியால் வெல்லமுடியும் அதாவது தமது தலைவிதியை தாமே கட்டுப்படுத்த முடியும் என நம்புகின்றவர்கள் இவர்கள் எந்தக்காரியத்தையும் ஆபத்துக்களை துணிவுடன் எதிர்கொண்டு செய்து முடிக்ககூடியவர்கள் தமது பணியில் அதன் திருப்தி கொண்டிருப்பர் எனவே இத்தகைய தன்மை கொண்டவர்களை சிக்கலான கடமைகளை ஆற்றுவதில் அதாவது முகாமைத்துவ தொழில் கடமைகளை ஆற்றுவதில் நன்றாகச் செயற்படுவார்கள். மேலும் இவர்கள் முன்னெடுத்துச் செல்லும் திறன், தொழிற்பாட்டு சுதந்திரம் என்பன தேவைப்படும் ஊழியர்க்கு அதிக பொருத்தமுடையவர்கள்.

இவர்கள் செயற்பாட்டுக்கு எதிரான கொண்டவர்கள் வெளிநிலையாளர்கள் எனலாம் இத்தகைய தன்மை கொண்டவர்கள் தம்வாழ்வில் என்ன நடைபெற்றாலும் அது தலைவிதியெனக் கூறிவேதனை அடை →

## ஊழியர்நடத்தையில்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வார்கள். அதாவது ''எல்லாம் இறைவனின் கையில் உள்ளது நாம் ஒன்றும் செய்யமுடியாது'' என நம்புகின்றவர்கள். இவர்கள் எல்லாக்காரியத்தையும் துணிந்து செய்யமுன்வர மாட்டார்கள், ஆபத்துகள், சிக்கலான, ஆபத்து நிறைந்த வேலை போன்றவற்றை பெரும்பாலும் தவிர்த்து வருபவர்கள் எனவே இவர்கள் முன்னெடுத்து செல்லும் திறன், செயற்பாட்டுச் சுதந்திரம் என்பவற்றை வேண்டி நிற்கும் வேலைகளுக்கு அதிக பொருத்த மற்றவர்களாகவும் நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட, திரும்ப திரும்ப ஆற்றப்படுகின்ற வேலைகளில் சிறப்பாக செயற்படுபவர்களாகவும் இருப்பார்கள்.

2) சுய மதிப்பு *(Self esteem)*

ஒருநபர் தன்னைப் பற்றி தான் கொண்டுள்ள மதிப்பீடாகும் சிலர் தன்னை உயர்த்தி மதிப்பிடலாம், அல்லது தாழ்வாகக் கருதலாம். தன்னைப்பற்றி உயர்வான மதிப்பை கொண்டநபர்கள்வெற்றிக்கான எதிர்பார்ப்பினையே அதிகம் கொண்டிருப்பார். தாம் செய்யும் வேலையில் வெற்றிபெறக் கூடியவகையில் அதிக திறமையை கொண்டிருப்பதாக நம்புவார். இவர் மற்றவர் கருத்துக்கு அதிகம் மதிப்பளிப்பதில்லை.

மாறாக தன்னைப்பற்றி குறைவாக மதிப்பை கொண்டவர்கள் மற்றவர்களிடம் இருந்து சாதகமான பதிலை எதிர்பார்ப்பவராக இருப்பார். தான் செய்யும் வேலையில் அதிக வெற்றி ஈட்டுவேன் என இவர் கருத்து கொண்டிருப்பத இல்லை.

3) சுயமுகாமை/சுயவழிநடத்தல்
*(Self - Monitoring)*

ஒருவர் வெளிப்புறக் காரணிகளிற்கு இசைவாக தன்னை அதாவது தனது நடத்தையை மாற்றிக் கொள்வது எனப்பொருள்படும். இப்பண்பு சிலருக்கு உயர்வானதாகவும் சிலருக்கு குறைவானதாகவும் இருக்கும். உயர் சுய வழி நடத்தல் பண்பினைக் கொண்டிருப்போர் வெளிச்சூழல் காரணிகளுக்கு, ஏற்ப தனது நடத்தையைச் சீர் செய்வதில் அதிகம் கவனம் காட்டுவர். அத்துடன் வேறுபட்ட சூழலில் வேறுபட்ட முறையில் நடந்து கொள்வார்.

மாறாக குறைந்த சுயவழி நடத்தற் பண்பினைக் கொண்டவர்கள் தங்களை வெளிச்சூழலுக்குஏற்றவாறு மாற்றி அமைக்க முடியாது இருப்பர் ஒவ்வொரு செயற்பாட்டிலும் தமது உண்மையான நடத்தையினையும் மனப்பாங்கினையும் வெளிப்படுத்துபவராக இருப்பர்.

4. ஆபத்தினை எதிர்கொள்ளல்;
*( Risk taking.)*

ஆபத்தினை எதிர்கொள்ளும் தன்மையிலும் ஒரு நிறுவனத்தில் நபர்கள் வேறுபடுகின்றார்கள் சிலர் ஆபத்தை ஏற்காமல் தவிர்த்துவிடுவர் மேலும் உயர் ஆபத்தை ஏற்கும் பண்பை உடையவர்கள் விரைவாகத் தீர்மானம் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் வினைத்திறன் வாய்ந்ததாக இருக்கும்.

### ஆளுமை நுட்பங்களை மதிப்பீடு செய்தல் ;
### Major assessment techniques of Personality )

ஆளுமைப்பண்புகள் உளவியல் சார்ந்ததாலும் நபர்களுக்கு நபர் வேறுபடுவதாலும் இதனை திட்டவட்டமாக மதிப்பிடுவது கடினம் எனினும் பொதுவாக பின்வரும் முறைகள் மூலம் மதிப்பீடுகள் செய்யப்படுகிறது.

1. ஆளுமை வினாக் கொத்துக்கள்,
*( Personality Questionnaires )*

இவ்வினாக்கொத்துகள்பல விடைகளைக் கொண்டதாக ஒரு தொகுதி வினாக்களைக் கொண்டதாக அல்லது ஆம்/இல்லை: உண்மை/பொய்; என்ற அமைப்பிலான விடைகளைக் கொண்ட ஒரு தொகுதி வினாக்களைக் கொண்டதாக அமையும்; குறித்த நபரிடம்/நபர்களிடம்இதனை வழங்கி அவர்கள் தெரிவு செய்யும் விடையை அடிப்படையாக கொண்டு அவரது/அவர்களது ஆளுமை மதிப்பிடப்படும்.

2. அளவீடுகளை வரிசைப்படுத்தல் :
*( Rating Scale )*

இம்முறை பொதுவாக வினாக் கொத்து அல்லது வரிசைப்படுத்தும் முறையினைப் போலன்றி ஒருவரது ஆளுமையை இன்னொருவரைக் கொண்டு மதிப்பிட முடியும். இங்கு ஒருவரது ஆளுமையை மதிப்பிடும் படிவம் நண்பரோ, சக வேலையாள்களாலோ, மேற்பார்வையாளர்களாலோ, அல்லது ஆளுமைமதிப்பீட்டு நிபுணர்களாலோ தரப்பட்டு மதிப்பிடலாம்.

3. உத்தேசப்பரீட்சைகள் :
*( Projective tests )*

இது பலபொருள்படும் வடிவங்கள், உருவங்கள் போன்றவற்றை ஒரு நபருக்கு காட்டி விபரிக்கும்படி கேட்டு அவரால் வழங்கப்படும் விளக்கங்களை அடிப்படையாக கொண்டு அவரது ஆளுமை தகுதிவாய்ந்த உளவியல் நிபுணரால் மதிப்பிடப்படும்

### ஆளுமை மதிப்பீடலின் போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் ;
### ( Problems are faced in assessing personality )

1. மாற்றமடையும் தன்மை கொண்ட ஒன்றாக உள்ளதாய் ஆளுமை பற்றிய மதிப்பீடு எதிர்காலத்தில் மாற்றத்துக்கு உள்ளாக வாய்ப்பு உண்டு.
2. மக்கள் பல்வேறுபட்ட சூழ்நிலையில் தங்கி இருப்பதால் சூழ்நிலை மாற்றத்துக்கு ஏற்ப ஆளுமைப் பண்பும் மாற வாய்ப்பு உண்டு. உதாரணமாக ஒரு ஊழியன் தொழிலில் மூற்கோபக்காரன் எதிர்புணர்வு உடையவர் எனினும் வீட்டில் சினேகிதமாகவும் சந்தோஷமாகவும் இருக்லாம். இங்கு இவரது ஆளுமை என்ன என மதிப்பிடுவது கடினமானதாகும்.
3. ஆளுமை மதிப்பீடு பக்கச் சார்பானதாக அமையுமாயின் அது தவறான முடிவை எடுக்க வழி வகுக்கும்.
4. ஆளுமை மதிப்பீடு செய்ய எல்லாச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவீட்டு நுட்பம் எதுவும் விருத்தி செய்யப் படவில்லை. போன்ற சிக்கல்களைக் குறிப்பிடலாம்.

### ஆளுமையின் வகைகள் :
### ( Type of Personality )

ஆளுமை பொதுவாக இரண்டு வகைப்படும் அவையாவன :

1. 'அ' வகை ஆளுமை
*( 'A' Type Personality )*
2. 'ஆ' வகை ஆளுமை
*( 'B' Type Personality )*

'அ' வகையான ஆளுமை என்பதுள் உள்ளவர்கள் எப்பொழுதும் கால அவசரம் பற்றிய ஒரு தீவிர

(8ம் பக்கம் பார்க்க)

## தென்னை வளமும்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் இராணுவ நடவடிக்கைகளில் விளைவால் எமது வளம் மிக்க நிலம் அழிக்கப்பட்டுள்ளது. இதனால் நிலத்தின் வளங்கள் பயன்மிக்க விருட்சங்கள் இல்லாதொழிந்துள்ளது. அவற்றுள் பனை தென்னை வளங்களின் அழிவென்பது நீண்டகால பொருளாதார பின்னடைவை எமக்கு ஏற்படுத்தியுள்ளது என்பதை தமிழர்கள் நன்கு உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

குறிப்பாக ஏ 9 பாதை திறக்கப்பட்டதும் அப் பாதையினூடாக பிரயாணம் செய்யும் ஒவ்வொருவரும் எமது வள அழிப்பின் மிக உயர்ந்த நிலையை தென்மராட்சிப் பிரதேசமெங்கும் பல்லாயிரக்கணக்கில் தலையின்றி நிமிர்ந்து நிற்கும் தென்னை மரங்களைப் பார்ப்பதன் மூலம் உணர்ந்து கொள்ள முடியும். தமிழரின் நிலத்தில் நிற்பதால் தலை இல்லாது விடினும் நிமிர்ந்து நிற்கும் வயிரத்தை உளத்தில் கொண்டு நிற்பது போன்ற உணர்வையே எமக்கு ஏற்படுத்துகின்றது. இவ் வளங்களின் அழிவு எமக்கு எவ்வாறான பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அவதானிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

தமிழர் தாயக நிலமாகிய வடக்கு கிழக்கு மாகாணத்தில் 27.12 இலட்சம் தென்னை மரங்களில் அண்ணளவாக ஆறு இலட்சம் தென்னை மரங்கள் இராணுவ நடவடிக்கைகளால் அழிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. ஆறு இலட்சம் தென்னை மரங்கள் எனும்போது 10000 ஏக்கர் நிலத்தில் நடுகை செய்யப்பட்டதாக கருத வேண்டியுள்ளது. எனவே வடகிழக்கில் 41730 ஏக்கரில் இருந்த தென்னை வளம் இன்று 31730 ஏக்கரில் உள்ள தென்னைவளம் தொகையாக மாற்றம் கண்டுள்ளமை பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந் நிலையில் ஒரு ஏக்கரில் மாத வருமானமாக ரூ. 5000/- தரக்கூடிய தென்னை வளம் 10000 ஏக்கருக்கும் ரூ.50000000/- (ஐந்து கோடி ரூபா மாதத்தில் இழந்து நிற்கின்றது. எனவே ஒரு வருடத்தில் அறுபது கோடி ரூபாவை எமதுமண் தென்னை வளம் அழிக்கப்பட்டதால் நிரந்தரமாகவே இழந்துவிட்டது என்பது கணக்கியல் ரீதியில் நாம் உணர வேண்டியதுடன் இவ் இழப்பானது ஐந்து வருடத்திற்கு மேல் தொடராது காக்க வேண்டிய பொறுப்பை எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இந்நிலையில் தென்னிலங்கையில் தென்னை அபிவிருத்திச்சபை மூலம் வழங்கப்படும் மூன்னெடுப்புக்கள் எமக்கும் புறக்கணிப்பில்லாது தென்னை வள அபிவிருத்தி இன்றும் கிடைக்க துறைசார் பெரியோர்கள் முயற்சிகளை மேற்கொள்வதுடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் ஒவ்வோர் தமிழ் குடும்பங்களும் தலா ஐந்து தென்னம் விருட்சங்களை இவ் ஆண்டிலேயே நடுகை செய்து பராமரிப்பதன் மூலம் ஆறு வருடங்களுக்கு பின்னராயினும் நாம்இழந்துபோனகோடிக்கணக்கான வருமானத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக்கிட்டும்.

எனவே எமது பாரம்பரிய வாழ்விடம் இன்று பாலைவனமாகவரண்டு கிடப்பதற்கு காரணம் எமது நில வளம் அழிக்கப்பட்டமையும் அதில் இருந்த பயன்மிகு விருட்சங்கள் அழிக்கப்பட்டமையுமே; இந் நிலையைப் போக்கி நிலவளத்தை முறையாகப் பயன்படுத்தி பயன்தரு விருட்சங்களை வளர்த்துப் பெருக்குவதற்கு மீண்டும் புத்துயிர்புக் கொடுப்பதுடன் அவ் வளங்களூடாக ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுகளையும் போக்குவதற்கும், எமது சுற்றாடல் மாசடையாமல் காத்துக்கொள்வதற்கும் எமது பாரம்பரிய நிலப்பரப்பு மண்ணரிப்பின் மூலம் சிதைவடைந்து போகாது தடுத்துக்கொள்வதற்கும் எமது நிலவள மேம்பாட்டுப் புரட்சியை உடனும் ஆரம்பித்து எமது மண்ணை செழிப்பு மிக்கதாக புனரமைக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம்.

நன்றியொருவருக்கு செய்தக்கால் -
அந் நன்றி
என்று தருங்கொல் என வேண்டாம் -
நின்று
தளரா வளர் தெங்கு தாருண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

## ஊழியர் நடத்தையில்...

7ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்வாகக் கொண்டிருப்பர் இவர்கள் குறைந்த நேரத்தில் அதிக சாதனையை செய்ய தீவிரமாக போராடுவார்கள், இவர்களது நடத்தை வருமாறு :

1. எப்பொழுதும் அசைந்து கொண்டிருத்தல் அல்லது தகர்த்து கொண்டு இருத்தல், விரைவாக சாப்பிடுதல்.
2. பொறுமை இன்மை காணப்படுவதுடன் ஒரே நேரத்தில் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கருமங்களை செய்தல்;
3. ஓய்வு நேரத்துடன் இணங்கிப் போக முடியாது இருத்தல்
4. இலக்குகள் தொகைகள் என்பன பற்றிய எண்ணத்துடன் காணப்படுவதோடு தாங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறோம் என்ற வகையில் வெற்றியை அளவிடுவர்.

'ஆ' வகை ஆளுமை கொண்டவர்கள் 'அ' வகை ஆளுமை கொண்ட நபர்களிலும் முற்றிலும் வேறுபட்டவர்கள் இவர்கள் பின்வரும் பண்பினைக் கொண்டிருப்பர்.

1. இவர்கள் அவசரமின்றி நிதானமாக வேலை செய்பவர்கள்
2. வேலை அளவை விட தரத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள்.
3. புதிய பிரச்சனைகளுக்கு தனித்துவமான தீர்வுகளை விருத்தி செய்ய அதிக நேரம் ஒதுக்குவர்;
4. தீர்மானம் நிதானமாக எடுப்பதால் கூடுதலான தரமானதாக அமையும்;

முடிவுரை :

மாறிவரும் இன்றைய உலகில், மிக முக்கியமான வளமாக நிறுவனங்களில் காணப்படுவது மனிதவளமாகும். எனவே இத்தகைய மனித வளத்தின் செயற்திறனான தீர்மானிக்கும் உளவியல் காரணிகளில் ஒன்றான ஆளுமைப்பண்புகள் ஊழியர் மீது செல்வாக்கு செலுத்துகிறது. எனவே இத்தகைய ஆளுமை பண்பினை மதிப்பீடு செய்து விருத்தி செய்வதன் மூலம் ஊழியர் நடத்தையை மாற்றியமைக்கலாம் என்பது அனைவரதும் நம்பிக்கையாகும்.

# நோய்களும் அதன்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளைபடுதல் இடுப்புவலியாகவும், முழங்கால் வலியாகவும் வெளிப்படுகிறது உண்மையில் இங்கு அவதானிக்க வேண்டிய விடயம் யாதெனில் நோயின்தன்மை அமைந்துள்ள இனம் ஒரு இடமாகவும், நோய் அறிகுறிகள் வெளிப்படுத்தப்படும் இடம் வேறொரு இடமாகவும் இருக்கிறது.

ஆகவே நோய் அறிகுறிகள் வெளிப்படுத்தப்படும் இடத்தில் சிகிச்சை செய்வது மருத்துவ அறிவியலிற்குச் சற்றுப் பொருந்தாத விடயம் என்பது நோக்கத்தக்கது சரியான சிகிச்சை முறை நோயின் தன்மை அமைந்துள்ள இடத்தில் அந்த நோயித்தன்மையை நீக்குவதாக இருக்க வேண்டும். அதற்கு செய்ய வேண்டிய ஒரேயொரு செயல்முறை சிகிச்சை முறை 'நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது'' என்ற ஒரேயொரு செயல்முறை மட்டும் தான்) எந்தப் பகுதியில் உள்ள நோயின் தன்மையையும் ( *Pathagenic force* ) எப்படி நீக்க வேண்டுமென்பதும், எந்தெந்த அறிகுறிகளாக வெளிப்படுத்தி நோயின்தன்மையை இல்லாது செய்ய வேண்டும் என்பதனையும் ''உடல்'' (நோய் எதிர்ப்புசக்தி) பார்த்துக் கொள்ளும்.

ஆத்மா, மனம் இருப்பதை மறுதலித்து விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சி ( *Scientific approah* ) என்கிற பேரர்வையில் இரசாயனக் கலவைகளைப் கொண்டு தனியே எலும்புக்கும், சதைக்கும், நரம்புக்கும் சிகிச்சை செய்வது என்றுமே வெற்றியளிக்கப் போவதில்லை என்பது வெள்ளிடைமலை அதாவது;

'' மனிதன் என்பவன் தனியே வெறும் உடலையும், சதையையும் எலும்புகளையும் கொண்ட சதைப்பிண்டமல்ல அவனுக்குள் மனம், ஆத்மா, உயிர்ச்சக்தி ( *Vital Force* ), உள்மனம், வெளிமனம், ஆத்மனம், உணர்வுகள், எண்ணங்கள், அற்ற உணர்ச்சிகள், கனவுகள், கற்பனைகள் என்று பல தொகுப்புகளை தன்னகத்தே கொண்ட ஒரு விசித்திரமான படைப்பாகும். இதை எந்த ஒரு மருத்துவமுறை முழுமையாகப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்றபடி சிகிச்சை அளிக்கிறதோ அதுதான் சரியான மருத்துவமுறை இதை விடுத்து வெறும் உடலிற்கும் சதைப் பிண்டத்திற்கும். உறுப்புக்களுக்கும் வெறும் இரசாயன கலவைகளைக் கொண்டு விஞ்ஞான பூர்வமானது'' ( *Scientic Approch* ) என்கிற முழுமனிதனை முழுமையாகக் குணமாக்க முடியாது ''

டாக்டர் ஜோசப்பால் B.H M.T, MDAcu) பேமிலிஹெல்த் ஜுன் 99 பக் 32) கர்ப்பப்பையில் சிகிச்சை செய்வதோ, அல்லது கர்ப்பப்பையை அகற்றுவதோ அந்த நோய் நிலைமையைக் கண்பார்வை மாறாக சிறுநீரகத்திற்கு சத்தியமளிப்பதல்ல

இரத்த அமுக்கம் B P அதிகரிப்பது என்ற விடயத்தை எடுத்துக் கொள்வோம் '' உமக்கு இரத்த அமுக்கம் B.P அதிகம்'' என்ற இரத்த அழுத்தப் பரிசோதனை முடிவின் மூலம் ஏற்படுகின்ற பயமே அவருடைய ஆரோக்கியத்திற்குக் கேடாக அமைகிறது. என்பது மிகவும் முக்கியமான விடயமாகும் உ+ம் பூரண ஆரோக்கியமான நிலையிலுள்ள ஒருவரை '' உங்களை மருத்துவப் பரிசோதனைக்கு ( *Scientific diagnosis* ) உட்படுத்தியதில் உங்களுக்கு '' ABCD '' என்ற ஆட்கொல்லி நோய் பீடித்திருக்கிறது. இன்னும் 2 மாதத்தில் நீங்கள் இறந்துவிடுவீர்கள் என்று கூறினால் அவர் ஒரு மாதத்திலேயே இறந்துவிடுவார். அதாவது ஒருவருக்கு ஏற்படுகின்ற மரணபயம், சமுதாயத்திலிருந்துதனிமைப்படுத்தல் இரண்டுமே மிகவும் ஆபத்தானது மிக விரைவாக உயிரைப் போக்கும் தன்மை இரண்டிற்குமுண்டு என்பது மறுக்க முடியாது

இரத்த அமுக்கம் B P. ஒருவருக்கு அதிகரிக்கிறது என்றால் அது உடலின் பாதுகாப்பு ஏற்பாடுகளுள் ஒன்று எமது உடலில் 12 முக்கியமான உள்ளுறுப்புக்களுண்டு.

பெருங்குடல் ( *Large Intestine* ) சிறுகுடல் ( *Small Intustinc* ), ரப்பை ( *Stomach* ) மண்ணீரல் *Spleen* ) தேகவெப்பக்கட்டுப்பாட்டு உறுப்பு ( *Thermo regulating system* ) இருதய மேலுறை ( *Herscarcium* ) இருதயம் ( *Heart* ) கல்லீரல் ( *Liver* ) பித்தப்பை ( *Gall bladder* ), சிறுநீரகம் ( *kidney* ) சிறுநீர்ப்பை ( *Urinary blodder* ) இந்த உறுப்புகளும் ஏதாவது உறுப்பு ஏதோ ஒரு காரணத்தினால் சோர்வாக இயங்கினால் அந்த உறுப்பைப் பாதுகாப்பதற்காக இரத்த ஓட்டம் தற்காலிகமாக ( அதிகரிக்கப் படுகிறது இத்த அமுக்கம் B.P அதிகரித்துத் தான் இந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டியிருக்கின்றது. ஆகவே தான் இரத்த அமுக்கம் B. P கூடியிருக்கிறது ஏதாவதொரு சிகிச்சை முறையினால் அந்த குறிப்பிட்ட உறுப்புகளிற்கான சக்தியோட்டம் சீராக்கப் 12 உறுப்புகளும் எந்த கணத்தில் செயற்பட வைக்கப்படுகிறதோ அந்தக் கணமே அதிகரித்த இரத்த அழுத்தமும் சாதாரண நிலைக்குக் கொண்டு வரப்படுகிறது இதேபோலத் தான் கொலஸ்ட்ரோல் ( *Cholesterol* ) என்ற கொழுப்பு உடலிலே தேக்கமடைவதும் ( இரத்தக்குழாய்களில் படிவடைதல் ) இதற்குக் காரணம் இந்தக் கொழுப்பு ( *Cholosterol* ) ஐ சரியான முறையில் ஜீரணிக்கச் செய்யமுடியாதளவிற்கு ஜீரண உறுப்புக்கள் பலவீனமாக இயங்குவது தான் ஆகவே கொலஸ்ட்ரோல் எனும் கொழுப்புபடிவதைத்தடுப்பதற்குள்ள சரியானதும் நெறியானதுமான ஒரேவழி அந்த படிவடைந்துள்ள கொழுப்பை ஜீரணிக்கச் செய்யக்கூடியவாறு ஜீரண உறுப்புக்களை ( சக்தியோட்டத்தை சமநிலைப்படுத்தி ) முழுமையான இயக்கத்தில் செயல்படவைப்பதுதான் உள்ள ஒரே வழியேயல்லாமல் இரத்த அமுக்கம் B P. ஐக் குறைப்பதும், *Non Fat Anchor* பாவிப்பதும் எந்த விதமான தீர்வையும் தராது என்பது ஆணித்தரமானது.

இதேபோலத்தான் நீரிழிவும்

45 வயதில் ஒருவருக்கு நீரிழிவு நோய் நிலைமைக்கான அறிகுறிகள் வெளிப்படுகிறதெனின் அந்த வயதில் திடீரென்று அந்த நோய் நிலைமை தோன்றியது என்பது கருத்தல்ல, 7 வயதிலிருந்து 45 வயதுவரை அவருடைய தவறான உணவுப்பழக்கமே காரணம்.

முக்கியமாக சீனி, பால்மா, ஐஸ் கிறீம், சோடா, சொக்லேட் இனிப்பு வகைகள் போன்ற செயற்கையான உணவுகள் அடிக்கடி உண்பது, முறையான பசியில்லாமால் உண்பது, அடிக்கடி உண்பது, நொறுக்குத்தீனிகள் உணபது. உணவுஉண்பதற்கு முன்பும் இடையிடையேயும் தண்ணீர் அருந்துவதுபோன்றதவறானஉணவுப்பழக்கம் முக்கியமான காரணமாக அமைகிறது சிறுவயதிலிருந்து இந்ததவறான உணவுப் பழக்கத்தினால் முறையற்ற ஜீரணம் ( *IPproper digestion* ) ஏற்பட்டு தவறான உணவுச் சத்துக்கள் (உடலினால் ஏற்றுக் கொள்ள முடி

(10ம் பக்கம் பார்க்க)

## உலகில் சாதனை படைத்த இடது கைக்காரர்களில் ஒரு சிலர்

- ❈ மகா அலெக்சாண்டர் - கிரேக்கமன்னர்
- ❈ நெப்போலியன் பொனபார்ட் - பிரான்சின் மாமன்னர்
- ❈ யூலிய சீசர் - உரோம படைத்தலைவன்
- ❈ பிடல் கஸ்ரோ - கியூபா ஜனாதிபதி
- ❈ யோன் ஒவ் ஆர்க் · பிரான்ஸ் வீராங்கனை
- ❈ லூயிஸ் (xvi) உரோம மாமன்னன்
- ❈ விக்டோரியா அரசி - இங்கிலாந்து அரசி
- ❈ ஜோர்ஜ் ii - இங்கிலாந்து அரசன்
- ❈ ஜோர்ஜ் vi - ,, ,,
- ❈ சார்ள்ஸ் இளவரசர் ,, ,,
- ❈ வில்லியம் இளவரசர் ,, ,,
- ❈ பென்சமின்நிட்டயாகி - இஸ்ரேலீய தலைமை அமைச்சர்
- ❈ நீகோஸ் ஒறேஸ்னி - கணிதவியலாளர்
- ❈ வேடன் பவல் பிரபு - சாரணியத்தின் தந்தை
- ❈ மைக்கல் ஏஞ்சலோ - ஓவியர்
- ❈ லியனாடோடாவின்சி - ஓவியர்
- ❈ பென்சமின் பிராங்கிளின் - அறிவியலாளர் நூல் வெளியீட்டாளர்
- ❈ அமெரிக்கஜனாதிபதிகள் - ஜேம்ஸ் ஏ. கார்ட்ஸீல்ட், ஜெரால்ட் யோர்ட், றொனால்ட் - றீகன், பில்கிளிங்டன், ஜோர்ஜ்புஷ்.
- ❈ சரத் என். சில்வா - இலங்கையின் பிரதம நீதியரசர்.
- ❈ மார்க் சில்வா - அறுவை மருத்துவர்
- ❈ அலன் போடர் - கிரிக்கெற்வீரர்
- ❈ கரி சோபர்ஸ் - கிரிக்கெற்வீரர்
- ❈ கென்ரிபோர்ட் - தன்னியக்கவூர்த்தி ஆக்குனர்.
- ❈ மொனிக்கா செலஸ் - டெனிஸ்வீராங்கனை

## நோய்களும் அதன்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

யாத அது நிராகரிக்கின்ற ஊட்டச் சத்துக்கள்) உடலிலே தேக்கமடைந்து நோய் நிலைமை வளர்ச்சியடைந்து குறிப்பிட்ட வயதில் சில அறிகுறிகள் உடலில் வெளிக்காட்டுபடப்கிறது'

சதை (*Pancreas*) யிலிருந்து இன்சுலினை சுரக்கவில்லையெனின் (*Output*) அதற்கு ஒரேயொரு காரணம் தரமான இன்சுலினை சுரக்கச் செய்யக்கூடியதாக சதையிக்கு தரமான ஊட்டச்சத்துக்கள் (*Input*) உடலினால்(ஜீரண உறுப்புக்களினால்) வழங்கபபடவில்லை யென்பதுதான் ஒரேயொரு காரணம். அதாவது 45 வயதின் பின்புதான் நீரிழிவு தோன்றியிருக்கிறதெனின 45 வயதுவரை சரியாகச் சுரந்த இன்சுலின் அதற்குப் பின்பு சுரக்காமல் விடுவதற்கு எது பின்னணிக்காரணமோ அதுதான் நீரிழிவிறகான உண்மையான காரணம் ஆகும். இந்த நோய் நிலைமையைக் குணப்படுத்துவதற்கான ஒரே வழி தரமான இன்சுலினைச் சுரக்கச் செய்யும் விதத்தில் (*Output*) தரமான ஊட்டச்சத்துக்களை (*Quality Uutr ienl*) சதையிக்கு வழங்கத்தக்கதாக (*Input*) அதாவது முறையான ஜீரணத்வத ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஜீரண உறுப்புக்களைப் பலப்படுத்தி முறையாகச் செயற்படவைப்பதுதான் (சக்தியே ட்டங்களைச் சமநிலைப்படுத்துவதன் மூலம்) ஒரேயொரு வழிமுறையாகும் இரத்த அழுத்தம் B. P. அதிகரிப்பது நோயல்ல, அதேபோல இரத்தத்தில் குளுக்கோஸ் அதிகரிப்பது நோயல்ல. உதாரணமாக B. P உடலிலே அதிகரிப்பதற்கு ஒரு குறிப்பிட்ள தெளிவான பின்னணிக் காரணமுண்டு. B P அதிகமாக இருக்கும் போது அதோடு சமாந்தரமாக வேறு பல அறிகுறிகளும் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் (தலையிடி, தலைச்சுற்று, மயக்கம்.

இரத்த அழுக்கம் B.P அதிகரிப்பது, மற்றய அறிகுறிகளும் பிறிதொரு வலிமையான, தெளிவான பின்னணிக் காரணத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற ஒரு நாணயத்தின் இரண்டுபக்கங்கள் போலமைந்த சமாந்தர அறிகுறிகளாகும் ''இரத்த அழுத்த நோய்'' என்பது அர்த்தமுடையதா என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகிறது அதாவது வழமையாக கூறப்படுவது போல் இரத்த அழுக்கம் B, P அதிகரிப்பதுதான் அதோடுசேர்ந்த மற்றய அறிகுறிகளுக்கும்காரணம் என்பது மருத்துவ தத்துவத்திற்கு முரணான விடயம் என்பது மறுக்கமுடியாததாகிறது இதேபோலத்தான் ரத்தத்தில் குளுக்கோஸ் அதிகரிப்பதும் அதாவது ரத்தத்தில் குளுக்கோஸ் அதிகரிப்பதுதான்' அதோடு சேர்ந்த மற்றய அறிகுறிகளிற்கும் (தலைச் சுற்று, மயக்கம் கோமா (*Coma*) காரணம் என்சது உண்மையல்ல.

உண்மையில் இரத்தத்தில் குளுக்கோஸ் அதிகரிப்பதும் அதோடு சேர்ந்த மற்றய அறிகுறிகளும் பிறிதொரு வலிமையான தெளிவான காரணத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போலமைந்த சமாந்தர அறிகுறிகள் ஆகும். அதாவது ரத்தத்தில் குளுக்கோஸ் அதிகரிப்பது தான் நோய்க்குக் காரணம் என்பது ஏற்றுக் கொள்ள முடியாது. உண்மையான பின்னணிக் காரணத்திற்கு(ஜீரண உறுப்புக்களைப் பலப்படுத்துவது) அந்த சிகிச்சை முறை மேற்கொள்ளப்பட வேண்டும் அதாவது அறிகுறியாக தோற்றுவிக்கப்படுகின்ற அதிகரித்த குளுக்கோஸை மருந்து மாத்திரைகள் மூலம் பலவந்தமாக குறைக்கும் விதத்தில் செய்வது உடலிற்கு ஆபத்தானது என்பது வெள்ளிடைமலை.

# பணியாளர்களுடன் கலந்தாலோசித்து முடிவுசெய்தல்
## ( *Employees Suggesion Scheme* )

பணியாளர்களுடன் தொடர்புடைய முகாமைச் செயற்பாடுகளுக்கு முன்னரைவிட இப்பொழுது அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. இப்பொழுதுள்ள பணியாளர்கள் தமது நிறுவனத்தின் முகாமைத் தீர்மானங்களில் தாமும் பங்களிக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். மிக வேகமாக முன்னேற்றமடைந்து வரும் ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் இவ்வாறு வேகமாக முன்னேறி வருவதற்கு அவ்வவ் நாடுகளில் உள்ள பணியாளர்கள் தமது நிறுவனத்தில் கொண்டுள்ள பற்றுதலும், ஈடுபாடுமே காரணமாகும்.

அரச நிறுவனங்களில் பொதுமக்களின் கருத்தை அறிவதற்கு ''ஆலோசனைப் பெட்டி'' முறை நடைமுறையில் இருந்து வருகின்றது. இதன்படி பொதுமக்கள் தமது கருத்துக்களையும், புகார்களையும் இவ்வாலோசனைப் பெட்டியில் இடுவதன் மூலம் திணைக்களத்தில் பலமாற்றங்களைச் செய்யமுடியும் இதேபோலநிறுவனங்கள் தமது பணியாளர்களின் கருத்தை அறிய பல்வேறு நடைமுறைகளைக் கையாண்டு வருகின்றன. இவ்வாலோசனைப் பெட்டிமுறை நிறுவனங்களைப் பொறுத்தவரை வெற்றிகரமானதாக கணிக்கப்படாததனால் பணியாளர்கள் பங்களிப்பினூடாக நிருவாகத்தில் மாற்றம் என்ற விடயத்திற்கு இன்று மதிப்பளிக்கப்பட்டு வருகின்றது.

அநேக நிறுவனங்களில் மேலிருந்து கீழான அதிகாரம் சொல்லும் நடைமுறையே காணப்படுகின்றது. இதனால் கீழிருந்து ஆலோசனைகளைப் பெறுவதில் பல பிரச்சனைகள் உண்டு எப்பொழுதும் மேலுள்ள நிருவாகிகள் கீழுள்ளவர்களின்கருத்துக்களைஅறிய இயல்பாக ஆர்வமுள்ளவர்களாக இருப்பர். ஒவ்வொரு வேலையாளர்களுக்கும் தமது வேலை நிறுவனம் உயர் அதிகாரிகள் தொடர்பாக ஒரு கருத்து நிலவும். வினைத்திறன் மிக்க கருத்துக்களை கீழிருந்து பெற்றுக் கொள்வதால் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அதைப் பயன்படுத்தமுடியும். கீழுள்ள கருத்துக்களைப் பிரதிபலிக்கும் வகையில் தீர்மானங்களை எடுக்கும் போது அதை நிறைவேற்றுவது இலகுவாக இருக்கும். சகல பணியாளர்களும் இதில் விருப்புடன் ஈடுபாடு காட்டுவர். இதனால் உற்பத்தித் திறன் அதிகரிக்கும்.

**பணியாளர்களின் ஆலோசனைத் திட்டம் என்பது என்ன ?**

ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் நிறுவனம் சம்பந்தமாக உற்பத்தி சம்பந்தமாக தமது கருத்துக்களை முன் வைக்கும் சந்தர்ப்பத்தை அளித்தல் பணியாளர் ஆலோசனைத் திட்டமாகும்.

**பணியாளர்களின் ஆலோசனை ஏன் தேவையாகும் ?**

★ பணியாளர்களுக்கு நிறுவனம் சம்பந்தமான உணர்வை ஏற்படுத்தல்

★ சகல பணியாளர்களதும் எண்ணம் பிரதிபலிப்பு புத்தி கூர்மை என்பவற்றைப் பயன்படுத்துவதுடன் நிறுவனத்துடன் ஈடுபாடு தரமான உற்பத்தி, உற்பத்தித் திறன் பாதுகாப்பு என்பன அதிகரிக்கும்

★ தொடர்பூட்டல் தொடர்பாடல் என்பன அதிகரிக்கும்.

★ நிறுவனம் சம்பந்தமான புரிந்துணர்வு அதிகரிக்கும்.

ஜி. கோணேஸ்வரன்
முகாமை உசாத்துணை ஆலோசகர்,
இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம்

**தரக்குழுக்களின் மூலம் பணியாளர்களின் ஆலோசனைகள்**

ஒருகுறிப்பிட்ட பணியைச் செய்கின்ற ஒருகுறித்தளவு பணியாளர்கள் ஒன்று சேர்ந்து தரக்குழுக்களை ஆரம்பிக்கின்றனர். தரக்குழுக்களின் ஆலோசனைகள் இறுதியில் கூட்டுக்கருத்துக்களாக இருக்கும் தரக்குழு பொதுவாக தமது பதவிக்கான ஆலோசனைகளை மட்டும் தயாரிக்கும். தங்களுக்குப் புறம்பான வேலை சம்பந்தமான ஆலோசனைகள் இங்கு அவதானிக்கப்படமாட்டாது. இத்தரக் குழுவின் மூலம் நல்லாலோசனை வழங்குவோருக்கு பரிசில்கள் வழங்குதலை விட பராட்டப்படுதலை சிறப்பானதாக கருதப்படுகின்றது.

**பணியாளர்கள் ஆலோசனைகள் வெற்றிகரமாக அமைவதற்கான நிலைமைகள்**

☆ பணியாளர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் பண்பு நிறுவனத்தில் நிலவும்.

☆ உச்ச மட்ட முகாமையாளர்களின் விருப்பு, கண்காணிப்பு, ஈடுபாடு என்பவற்றைத் தரக்குழுக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

☆ இக்கருத்துக்கள் தொடர்பிலான நம்பத் தன்மை பரிசோதனையின் அடிப்படையில் முடிவு காணல் ஆகிய நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்ளுதல்.

☆ ஆலோசனைகள் இலக்குடன் கூடியதாகவும், ஒன்றுடன் ஒன்று சம்பந்தமுடையதாகவும் செயற்படுத்தக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

☆ ஆலோசனைகள் விளக்கமாகவும் சாதாரண ஆயவுபுள்ளதொன்றாகவும் மீளபரிசீலனை செய்யக்கூடியதாகவும் அமைய வேண்டும்.

☆ நிறுவனத்தில் இடம்பெறும் விரயங்களை முகாமையாளர்கள் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

☆ பணியாளர்களின் திறமையை அறிந்து கொள்ளும் வாய்ப்பு அதனை நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு பரிசுத் திட்டங்களை ஏற்படுத்தும் வாய்ப்பு என்பன ஏற்படுத்தப்பட வேண்டும்.

☆ பயிற்சியுடன் கூடியதாக, சமூக பொருளாதார நலன்களைப் பேணுவதாகவும் இருக்கலாம்.

**''ஆலோசனைப் பெட்டி முறை'' தோல்விக்கான காரணங்கள்**

☆ இவ்வாலோசனைகள் தனித்துவமானதா? குறித்த நபர்களுடையது தானா? என்பதை உறுதிப்படுத்த முடியாது.

☆ பிழைகளை கண்டுபிடித்து திருத்துமளவுக்கு அறிவு பயிற்சி இல்லாமல் இருக்கும்.

☆ மத்திய மட்டத்தில் இருக்கும் முகாமையாளர்கள் இது தமக்கு எதிரான முறைப்பாடு என நிர்ணயிக்கும் சந்தர்ப்பம் உண்டு.

☆ உடன் பிரதிபலன் இல்லையென்றால் தொடர்ந்து செய்வதில் அர்த்தமில்லை என்ற நினைப்பு ஏற்படும்.

Registered as a News paper at the G. P. O
SriLanka Under / No K. V. J. 59 / 87

ஐக்கியதீபம் புரட்டாதி - 2002

## கூட்டுறவுஇயக்கத்தை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

சங்கத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தென்பகுதியில் உள்ள கொட்டப்பொல பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர், உபதலைவர், இயக்குனர்கள் பொது முகாமையாளர், கணக்காளர் கிளை முகாமையாளர்கள் மற்றும் முகாமைப்பணியாளர்கள் ஆகியோரும், கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குனர்கள், பணியாளர்கள், புலோலி உடுப்பிட்டிச் சங்கங்களின் தலைவர்கள், இயக்குனர்கள், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட தென்பகுதிக் கூட்டுறவாளர் கூட்டுறவு முத்திரை சின்னம் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

தென்பகுதிக் கூட்டுறவாளர்களுக்கும் யாழ். கூட்டுறவாளர்களுக்குமான கலந்துரையாடலை வவுனியா கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி உப அதிபர் திரு எஸ் கேதீஸ்வரன் வழிநடத்தினார்.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தனது தலைமையுரையின் போது, யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு இயக்கம் முன்பு வளர்ச்சி அடைந்திருந்தது போல் இன்று வளர்ச்சி அடையாது வளர்ச்சி குன்றிய நிலையில் இருப்பதாகவும், தெற்கில் தற்போது கூட்டுறவு வளர்ச்சி அடைந்து வருவதாகவும், கூட்டுறவு இயக்கத்தை மேலும் வளர்ச்சி அடையச் செய்யக் கூட்டுறவாளர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் வே. தர்மகுலசிங்கம் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குனர் க.வேலும்மயிலும் வவுனியா கூட்டுறவுப்பயிற்சிக் கல்லூரி அதிபர் எஸ். கேதீஸ்வரன், சி. வீரசிங்கம் (சமாதான நீதவான்) ஆகியோரும் உரையாற்றினார்கள்.

தென்பகுதியில் இருந்து வந்த கூட்டுறவாளர்கள் தமது உற்பத்திப் பொருளான தேயிலைப் பைக்கற்றுக்களை கூட்டுறவாளர்களுக்கு அன்பளிப்பாக வழங்கிக் கௌரவித்தார்கள்.

## தற்போது மாறிவரும்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலேயே காணப்பட்டது, இதனால் நாட்டுமக்கள் எல்லோருக்கும் மதிய உணவுகிடைக்கவில்லை 1942ம் ஆண்டளவில் உணவு விநியோகம் கூட்டுறவுத்துறையால் மேற்கொள்ளப்பட்டபோது அக்காலப் பகுதியில் இலங்கை மக்கள் அனைவருக்கும் சீரான உணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் அன்று தொட்டு இன்று வரை மக்களின் அடிப்படைத் தேவைகளான அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோகம் ஆகியவற்றை கூட்டுறவு நிறுவனங்களே மேற்கொண்டுவந்தன.

வர்த்தகத் துறையில் தற்போது ஏற்பட்டுவரும் போட்டிகள், அரச சார்பற்றநிறுவனங்களின்வருகையும், சமூக மட்டத்தில், அதன் செயல்பாடுகள் தொடர்பில் கூட்டுறவு நிறுவனங்களுக்கு முன் உள்ள சவால்கள் தனியார் துறையினரின் படை எடுப்புகள் போன்றவற்றை எதிர்கொள்ள கூட்டுறவாளர்கள் தயாராக வேண்டும்.

இந்நிலையில் கூட்டுறவுத்துறை புதிய தொழில்துறைகளை அடையாளம் கண்டு செயற்படுதல், பயனுறுதிமிக்க வேலைப்படையை உருவாக்குதல், தொழில் நுட்ப முறைகளைப் புகுத்துதல் சிறந்த நிர்வாகக் கட்டமைப்புகளை ஏற்படுத்திக்கொள்ளல் என்பன அவசியமாகுமென்றார்.

இப்பயிற்சிக்கருத்தரங்கில் "கூட்டுறவுச்சங்கங்களின் உற்பத்தித் திறனை விருத்தி செய்தல், உற்பத்தித் திறன் அறிமுக, உற்பத்தித்திறன் உத்திகள்" "வினைத்திறன் மிக்க நேர முகாமை, வினைத்திறன் மிக்க விரயக்குறைவு, வினைத்திறன் மிக்க தொடர்பாடல்" என்னும் விடயங்கள் பற்றி இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவன சிரேஷ்ட முகாமைத்துவ ஆலோசகர் சி. கோணேஸ்வரன், அவர்களும், "வினைத்திறன் மிக்க செலவினக் கட்டுப்பாடு" என்னும் விடயம் பற்றி யாழ். கூட்டுறவுத்திணைக்கள சிரேஷ்ட கணக்காய்வாளர் எஸ். சின்னராசா அவர்களும் விரிவுரையாற்றினார்கள்.

இப்பயிற்சிக்கருத்தரங்கில் சம்பவ ஆய்வுகளை " கூட்டுறவுச்சபை மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வே. செல்வரத்தினம் வழிநடத்தினார். பயிற்சிக்கருத்தரங்கு முடிவில் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## பனை தென்னைவள..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

3. தும்பு, பாய், கடகம், கூடை, தளபாடங்கள், விசிறி, சுவர்மாட்டிகள், அலங்காரப் பூக்கள்.
4. வீட்டு நிர்மானப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள்.

மேற்படி பல்வேறு பொருட்கள் உற்பத்தி செய்வதுடன், அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டு அபிவிருத்தி தொடர்பில் புலமைப்பரிசில் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அங்கத்தவர் நலன்கருதிவிவசாயகாப்புறுதி திட்டத்தில் பங்களித்து வருகின்றோம்.

இதற்கு மேலதிகமாக நாம் கோருவது யாதெனில்;

கூட்டுறவுப்பரிசோதகர் நியமனத்தில் தகைமையுள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கல்.

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்குவது போல் இலவச பிரயாண வசதி ஒழுங்கு செய்தல்,

அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கு மானிய நிதியில் உதவி செய்தல்.

போன்ற கோரிக்கைகளையும் இத்தால் தங்களிடம் கோரி நிற்பதுடன், மேற்குறிப்பிட்ட எமது பொருளாதார செயற்பாடுகளை திறம்பட மேற்கொள்வதற்கும் செயற்பாடுகளில் வெற்றியடையவும் போதிய நிதி சார்ந்த மற்றம் நிதிசாரா உதவிக்ளையும் தங்களிடம் வேண்டி இம் மகஜரை தங்களிடம் சமர்ப்பிக்கின்றோம். என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தின் 2ம் மாடியில் இயங்கும் யாழ். மா.கூ. சபையினரால் 2002ம் ஆண்டு புரட்டாதிமாதப் வெளியிடப்பட்டது.